**கவனிக்க.**-*2023.03.31 ஆந் திகதிய 2326 ஆம் இலக்க, வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2327 - 2023 අප්‍රේල් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.04.06**

*2327 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - | நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| முன்னறிவித்தல்கள் | - | மேல் மாகாணம் | - |
| இறுதிக் கட்டளைகள் | - | மத்திய மாகாணம் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - | தென் மாகாணம் | - |
| மேல் மாகாணம் | - | வட மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - | கிழக்கு மாகாணம் | - |
| தென் மாகாணம் | - | வடமேல் மாகாணம் | - |
| வட மாகாணம் | - | வடமத்திய மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - | ஊவா மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - | சப்பிரகமுவ மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - | காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| ஊவா மாகாணம் | - | காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - | காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - | நானாவித காணி அறிவித்தல்கள் | 136 |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, ஏப்பிறல் மாதம் 28ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஏப்பிறல் மாதம் 12ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



135- B 082443 - 353 (2023/04)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/62145.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : மாகாண/காணிஆ/கா9/மகு/நீ.கு.12.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், மஹகும்புக்கடவல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 613/ஈ, தங்கஸ்வெவ கிராம அலுவலர் பிரிவில் சோகொன்கல்ம கிராமத்தல் பிரதேச நில அளவையாளர் ஜே.பி. என். ஜயசுந்தர என்பவரால் வரையப்பட்ட வரைபட இல. 12798 இல் காணித்துண்டு இலக்கம் A எனக் காட்டப்பட்டுள்ள 8.0935 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள அரசகாணியை விவசாய வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு குருவிட்டகே ஜோசப் பிராங்கிளின் சில்வா என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : டொபோ.பி.ப. 28 காணித்துண்டு இலக்கம் 1875 இன் பகுதி;
கிழக்கு : பாதை ஒதுக்கீடு;
தெற்கு : டொபோ.பி.ப. 28 காணித்துண்டு இலக்கம் 1876 இன் பகுதி;
மேற்கு : பாதை ஒதுக்கீடு.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது.ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2023.03.01ஆந் திகதி தொடக்கம்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- குத்தகை ஆரம்பமாகும் 2023 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா ஐந்து மில்லியனுக்கு ரூபாய்க்கு (ரூ.5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2023 ஆம் ஆண்டுக்கான வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000,00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும், ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுப்பட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விடுக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.03.01 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

(ஐ) குத்தகை தொகை தொடர்ச்சியாக செலுத்தப்படாத பட்சத்தில் நிலுவைத் தொகைக்கு 10% தண்டப்பணம் விதிக்கப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டப்.ஆர்.ஏ.ரி.ஷகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.03.17.

04- 18

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/69077.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NWP/ PLC/ L9/ KL/ LTL/ 37.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, பள்ளிவாசல்துரை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பள்ளிவாசல்துறை எனும் கிராமத்தில் அமைந்துள்ள வரைபட இலக்கம் පූ/ කල්/ 2016/03 இல் 'அ' எனும் இலக்கத்தையுடைய காணித்துண்டில் ஒரு பகுதியாகக் காட்டுவதற்கு வரையப்பட்ட மதிப்பளவு சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 11 ஏக்கர், 00றூட், 00பே. (4.4515 ஹெக்டயார்) விஸ்தீரணமுள்ளதுமான அரசாங்க காணியை நண்டு வளப்பிக்காக நீண்டகால குத்தகைக்குத் தருமாறு கேட்டு பண்வலகும்புர கோணவில் எனும் முகவரியில் வசிக்கும் திரு.இராஜபக்ச பத்திரணகே சுரேந்திர சம்பத் இராஜபக்ச என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : கால்வாய்;
கிழக்கு : தரவைக்காணி அரச;
தெற்கு : பாதை மற்றும் கால்வாய்;
மேற்கு : தரவைக்காணி அரச.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது.ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது வருடங்கள் (30) 2023.01.17ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டுக்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% குத்தகை 2023 ஆம் ஆண்டுக்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தி அமைக்கப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது முந்திய 5 வருட காலப்பகுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்தின் மீது 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைச் பணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக மாகாணக் காணி ஆணையாளர்/மாகணங்களுக்கு இடைப்பட்ட காணி ஆணையாளரின் /பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/மாகணங்களுக்கு இடைப்பட்ட காணி ஆணையாளரின்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.01.17 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் நிறைவு பெறும் வரை கீழ்க்குத்தகைக்கு அல்லது கைமாற்றம் செய்ய அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் தொடர்ச்சியாக செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத குத்தகை நிலுவைகள் மீது 10% தண்டப்பணம் அறவிடப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டப்.ஆர்.ஏ.ரி.ஷகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.03.22.

04- 17

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/73302.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : EP/ 28/ LB/ L-10/ LS/ TRI/ KUC/ 115.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கும்புருபிட்டி கிழக்கு 240B கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கும்புருபிட்டி கிழக்கு கிராமத்தின் டொபொ பீபீ 37 ஆம் இலக்க நில வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 3384 இன் 0.8094 ஹெக்டயார் அளவுடைய காணித்துண்டினை சமய நடவடிக்கைகளின் பொருட்டு மஹாபோதி பௌத்த மன்றம் என்னும் பெயரில் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :

காணித்துண்டு இலக்கம் 3384 இன் எல்லை

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 3350, 3308;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 3350, 3349;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 3349;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 3349, 3350, 3308.

03. இக்காணியானது குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது வருடங்கள் (30) வருடங்கள் (2023.03.15 ஆந் திகதியிலிருந்து) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரின் மூலம் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறுமாறு காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(இ) குத்தகைக்காரரின் மூலம் இக்காணியினை சமய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர் /பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.03.15 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக்குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்கு கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்தும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப்பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதித்தலாகாது என எண்ணும் பட்சத்தில் அவற்றுக்கான தகுந்த காரணங்களை எழுத்து மூலம் எனக்கு அறிவிக்காத விடத்து காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

கே. ஆர். மெத்மா ரணசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.03.21.

04- 43

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/ 60758
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NCP/ PLC/ L5/ MW/04.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டத்தில் மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 358, ஒயாமடுவ கிராம அலுவலர் பிரிவில் ஒயாமடுவ கிராமத்தில் இலக்கம் எப்.வீ.பீ. 2 வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 385 இன் ஒரு பகுதியினைக் காட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 08 ஏக்கர் அரச காணித்துண்டினை விவசாய நோக்கத்திற்காக சஜீவ பிரதீப் குமார குணரத்ன அவர்களின் பெயரில் கோரப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

02.கோரப்பட்ட காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : எப்.வீ.பீ. 2 இல் காணித்துண்டு இலக்கம் 384 மற்றும் 391;

கிழக்கு : எப்.வீ.பீ. 2 இல் காணித்துண்டு இலக்கம் 386 மற்றும் 391;

தெற்கு : எப்.வீ.பீ. 2 இல் காணித்துண்டு இலக்கம் 385 இன் ஒரு பகுதி மற்றும் 386;

மேற்கு : எப்.வீ.பீ. 2 இல் காணித்துண்டு இலக்கம் 385 இன் ஒரு பகுதி மற்றும் 384.

03. கோரப்பட்ட நிலத்தை குத்தகைக்கு விட முடியும். எனவே அரசாங்கத்தின் ஏனைய பிரமாணங்களின் கீழ் குறித்த நிலத்தை குத்தகைக்கு விட அரசு உத்தேசித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது வருடங்கள் (30) (2022.08.22ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.-2022 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாய்க்கு (ரூ.5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் நிலத்தின் முன்னேற்றப்படாத மதிப்பில் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டில் நிலத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாயை (ரூ.5,000,000.00) தாண்டும் சந்தர்ப்பங்களில் அது தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் நிலத்தின் முன்னேற்றப்படாத பெறுமதியில் 4% உம் ஆகும். இந்த வரித் தொகை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டும், மேலும் இது முன்னைய 05 ஆண்டுகளின் முடிவில் அறவிடப்பட்ட வருடாந்த வரித் தொகையுடன் 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 01 வருடத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையக் கூடியவாறு காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக் காணியினை விவசாய நோக்கங்கள் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தக்கூடாது;

(ஈ) இந்த வரியானது பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் உட்பட்டது;

(உ) நிலம் குத்தகைக்கு விடப்பட்டால் குத்தகைதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் காணியினை கையகப்படுத்தியதன் நோக்கத்தை நிறைவு செய்யத் தவறினால், குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.08.22 ஆந் திகதி முதல் 05 ஆண்டுகள் வரை இந்த நிலத்திற்கு துணைக் குத்தகை வழங்கவோ அல்லது உரிமை மாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது அப்படியிருந்தும் காணியினைக் குத்தகைக்கு பெறப்பட்ட நோக்கங்களுக்காக மட்டும் துணை குத்தகை அல்லது உரிமை மாற்றம் செய்ய முடியும்;

(எ) வரியானது தொடர்ச்சியாக செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யத்தவறுமிடத்து ஒப்பந்தம் தானாகவே முடிவுறுத்தப்படும்.வரியானது தொடர்ச்சியாக செலுத்தாத பட்சத்தில் நிலுவைத் தொகைக்கு 10% அபராத வட்டி விதிக்கப்படும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வாரங்களுக்குள்ளாக சம்பந்தம்பட்ட காணியினை குத்தகைக்கு வழங்கக் கூடாது என்பது தொடர்பில் அதற்கான காரணங்களை எழுத்து மூலம் என்னிடம் சமர்ப்பிக்கத்தவறுமிடத்து கோரிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட காணி குத்தகைக்கு விடப்படும்.

டி.டி.நவோத்யா சி கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.03.19.

04- 16

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/66163.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.:
என்சிபீ/பீஎல்சி/எல்05/எம்டப/04.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுர மாவட்டம் மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 372 துப்பிட்டியாவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மஹசியம்பலாகஸ்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள 2020/WL/03 கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 01 இல் காட்டப்பட்ட சுமார் 05 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியை விவசாய நோக்கத்திற்காக மொஹட்டாலலாகேவின் தொன் லஷித துல்ஷான் அமரசிங்க எனும் பெயரில் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : இலக்கம் 2020/WL/03 கொண்ட 2020.09.26 ஆந் திகதிய வரைபடத்தில் துண்டு இல. 02

கிழக்கு : வன நிலம்;
தெற்கு : வன நிலமும் வீதியும்;
மேற்கு : வீதி.

03. குறித்த காணி கோரப்பட்ட தேவைக்கு குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது (30) வருடங்கள் (2022.09.20ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் வருடத்திற்கான காணியின் விலைமதிப்பீடு பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% ஆகும். 2022 ஆம் வருடத்திற்கான காணியின் விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இந்தக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாக செலுத்தப்படல் வேண்டும்.

தவணைப் பணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள/கட்டப்பட்ட கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.09.20 ஆந் தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை உரிமை மாறல் அல்லது காணி கீழ்க்குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். வரி செலுத்துவதைத் தொடராத பட்சத்தில் நிலுவைத் தொகைக்கு 10% அபராத வட்டி விதிக்கப்படும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டீ.டீ.நவோதயா சீ கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.03.28.

04- 33

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/ 63939
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NCP/ PLC/ L02/LL.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

அநுராதபுரம் மாவட்டம், மத்திய நுவரகம்பலாத்த பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 281 உலுக்குளம் கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த இலுப்பம்கடவெல கிராமத்தின் காணி உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட அண்ணளவான நில வரைபடத்தின் காணித்துண்டு 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 05 ஏக்கர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு திரு. கோசல திலான் பண்டார ஹத்னாகொட என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02.கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : எஸ். பீ. ஹத்னாகொடவின் காணி;
கிழக்கு : எச். எம். ஆர்.கே. ஹேரத் மற்றும் பீ.டீ. பண்டார ஆகியோரின் காணி;

தெற்கு : பாதை ஒதுக்கம் ;
மேற்கு : அரச காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது வருடங்கள் (30) (2023.01.27ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.-** 2023 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதி 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன் திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப்பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(இ) குத்தகைக்காரர் இக் காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதெச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அல்லது நிர்மாணிக் கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.01.27 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தினை அடைந்து கொள்வது தவிர்ந்த வேறு நோக்கங்களுக்காக துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணம் தொடர்ச்சியாக செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் பொருட்டு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வார காலப்பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக் கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

டீ.டீ.நவோத்யா சீ கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.03.24.

04- 34

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/ 63946
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NCP/ PLC/ L02/LL.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மத்திய நுவரகம்பலாத்த பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 281 உலுக்குளம் கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த இலுப்பம்கடவெல கிராமத்தின் காணி உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட அண்ணளவான நில வரைபடத்தின் காணித்துண்டு 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 05 ஏக்கர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு திரு. புத்திக திலான் பண்டார ஹத்னாகொட என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02.கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : எச். எம். ஆர்.கே. ஹேரத் என்பவரின் காணி;
கிழக்கு : பாதை ஒதுக்கம்;
தெற்கு : குளக்கரை ஒதுக்கம் ;
மேற்கு :பீ.டீ. பண்டாரவின் காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது வருடங்கள் (30) (2023.01.27ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.-** 2023 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதி 2% ஆகும்.வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன் திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப்பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(இ) குத்தகைக்காரர் இக் காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதெச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அல்லது நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.01.27 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தினை அடைந்து கொள்வது தவிர்ந்த வேறு நோக்கங்களுக்காக துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணம் தொடர்ச்சியாக செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் பொருட்டு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வார காலப்பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக் கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

டீ.டீ. நவோத்யா சி கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.03.24.

04- 35

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/ 63965.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NCP/ PLC/ L02/LL.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மத்திய நுவரகம்பலாத்த பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 281 உலுக்குளம் கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த இலுப்பம்கடவெல கிராமத்தின் காணி உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட அண்ணளவான

நில வரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 03 ஏக்கர் , 03 றூட், 18பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு ஹேரத் முதியன்சேலாகே மானிதா ரேணுகா குமாரி ஹேரத் என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02.கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : சொரவ் வாவி;
கிழக்கு : சொரவ் வாவி;
தெற்கு : பி. திலான் பண்டாரவின் காணி;
மேற்கு : எஸ்.பீ. ஹந்தனாகொட மற்றும் பி. திலான் பண்டார ஆகியோரின் காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2023.01.27ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும்.வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் அபிவிருத்தி பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன் திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(இ) குத்தகைக்காரர் இக் காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப் பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அல்லது நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.01.27 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தினை அடைந்து கொள்வது தவிர்ந்த வேறு காரணங்களின் பொருட்டு துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணம் தொடர்ச்சியாக செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் பொருட்டு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வார காலப்பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக் கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

டீ.டீ. நவோத்யா சீ கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, மாச்சு 24.

04- 36

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

**அட்டவணை - 2023**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 06.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2023 |
| | | புதன் | 12.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2023 |
| | | வெள்ளி | 21.04.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 06.04.2023 |
| | | வெள்ளி | 28.04.2023 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2023 |
| **மே** | .. | வியாழன் | 04.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2023 |
| | | வெள்ளி | 12.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2023 |
| | | வெள்ளி | 19.05.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.05.2023 |
| | | வெள்ளி | 26.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.05.2023 |
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2023 |
| | | வெள்ளி | 09.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2022 |
| | | வெள்ளி | 16.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2023 |
| | | வெள்ளி | 23.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2023 |
| | | வெள்ளி | 30.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.